தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

வியாழக்கிழமை, 1978 மார்ச் 23.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே . . .

குறிப்பு:— த்ர் உரையின் தொடக்கத்தில் * உடுக்குறி இடம்பெற்றிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

1. ஒழுங்குப் பிரச்னைகள்.

(அ) முதல் ஒரு மணிநேரத்தில் வினாக்கள்-விடைகள் எடுத்துக்கொள்ளாமல் வேறு அலுவல்களை எடுத்துக் கொள்வது குறித்து.

திரு. துரை முருகன்: பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவர் அவர்களே, இந்த அவையில் முதலில் கேள்வி நேரம் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். அதற்கு பிறகுதான் மற்ற காரியங்யங்களை எடுத்துக்கொள்வதானால் எடுத்துக்கொள்ளலாம். ஆகவே, முதலில் ஏன் கேள்விகளை எடுத்துக்கொள்ளாமல் முன்னவர் அவர்களை அறிக்கை அளிக்க அழைக்கிறீர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் அனுமதியோடுதான் இதைப் படிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(2) அரசினர் தீர்மானம்

விதி 22ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தலைவர் அவர்களே, ''சட்டமன்றப் பேரவையில் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்—விடைகள்' என்றுள்ள சட்டமன்றப் பேரவை விதி 22-ஐ இன்று தளர்த்த வேண்டும்.'' என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

விதி 22-ஐத் தளர்த்தல்—தொடர்ச்சி :

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட மன்ற விதி 244-ன் அடிப்படையில், நான்,

''சட்ட மன்றப் பேரவை விதி 22-ஐ இன்று தளர்த்த வேண்டும்''

என்ற தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறை வேற்றப்பெற்றது.

Thiru DuraiMurugan : I am pressing for a division Sir.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதெல்லாம் முடிந் தாகிவிட்டது already finished தயவுசெய்து உட்காருங்கள்.

(3) 1977-78-ம் ஆண்டுக்கான இறுதித் துணை மதிப்பீடுகள் அளித்தல்.

[முற்பகல் 9-10]

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவர் அவர்களே, 1977—78 ஆம் ஆண்டுக்கான இறுதித் துணை மதிப்பீடுகளை இம் மன்றத்தின் முன் வைக்கிறேன். மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவான அறிக்கை ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது. மொத்தம் 121.41 கோடி ரூபாய்க்கான துணை மானியக் கோரிக்கைகள் அவையின் ஒப்புதலுக்காக வைக்கப்பட்டுள்ளன. இவற்றில் 34.09 கோடி ரூபாய் வருவாய்க் கணக்கிலும், 87.32 கோடி ரூபாய் மூலதன, கடன் கணக்கு களிலும் வரும். மொத்தக் கோரிக்கையில் 121.27 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்ட இனங்களின் கீழும், 0.14 கோடி ரூபாய் சாட்டப்பட்ட இனங்களின் கீழும் அடங்கும். இந்த மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள சில முக்கியமான செலவு விவரங்களை மட்டும் குறிப்பிட முற்படுகிறேன்.

துணை மானியக் கோரிக்கையில் மிக அதிகமான நிதி ஒதுக்கீடு, கடன்களும் முன் பணங்களும் என்பதன்கீழ் 70.34 கோடி ரூபாய் அளவுக்கு அமைந்துள்ளது. அரசுத் துறை நிறுவனங்கள், கழகங்கள் ஆகியவற்றிற்குக் கொடுக்கப்படுகிற வழி வகை முன் பணம் ஆகிய 55.71 கோடி ரூபாய் இதில் அடங்கும். தமிழ் நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் கொள்முதல்